ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1363/4 - 2004 ඔක්තෝබර් 18 වැනි සඳුදා - 2004.10.18

1363/4 ஆம் இலக்கம் - 2004 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் கீழ் கம்பஹா மாநகர சபையின் உறுப்பினர் ஒருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

மேல் மகாணத்தின் மாகாண சபை உறுப்பினரொருவராக நியமிக்கப்பட்டதன் காரணமாக, கம்பஹா மாநகர சபையின் உறுப்பினரொருவரது பதவி வெற்றிடமாகியிருக்கின்றதாதலாலும்;

எஸ். கிங்ஸ்லி கஸ்தூரிஆரச்சி என்னும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ஒரு மாத காலப்பகுதிக்குள் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வெளிப்படுத்தப்பட வேண்டியஅக்கட்சியைச் சேர்ந்தவரும் கம்பஹா மாநகர சபையின் உறுப்பினர் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடையவருமான ஆள் ஒருவரை பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65அ (2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. ராஜபக்ஷ பதிரன்னெஹெலாகே இந்திரசிறி நிமல் ராஜபக்ஷ என்பவரைப் பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது கம்பஹா மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் மொஹமட் மஹ்தூம் மொஹமட் ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ(2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ராஜபக்ஷ பதிரன்னெஹெலாகே இந்திரசிறி நிமல் ராஜபக்ஷ என்பவர், கம்பஹா மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

எம். எம். மொஹமட்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
கம்பஹா மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
கம்பஹா மாவட்டம்.
2004, ஒற்றோபர் 05.

11-24